முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி ஆவணி மாதம் 31ம் திகதி முதல் புரட்டாசி மாதம் 7ம் தேதி வரை**

**செப்டம்பர் 16ம் திகதி முதல் செப்டம்பர் 23ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **சத்திய தரும பலம் கொண்ட**
   **சமதர்மம் சமத்துவ நிறைந்த பரதமே**
   **சித்தர்கள் ஞானிகள் நிறைந்த**
   **சித்திகள் மிகுந்த தமிழகமே**

2. **இந்தியா தமிழகம் தன்னில்**
   **இந்த வார நிகழ்வாக எதிர்கால பலனை**
   **சிந்தைபட விளம்பி வேங்கை திங்கள் முப்பானோர் திகதிமேல்**
   **செப்பிட நங்கை திங்கள் நாததிகதி வரையான நிகழ்வை**
   **(விளம்பி வருடம் ஆவணி மாதம் 31ம் நாள் 16.09.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 7ம் நாள் 23.09.2018, ஞாயிறு முடிய)**

3. **நிகழ்வாக சுப்பிரமணியர் யானும்**
   **நிலமதனில் வார ஆசியாக விளம்புவேன்**
   **வகைபட பரதம் எங்குமே**
   **வளர்ச்சிப் பணிகள் நடந்தேறும்**

4. **தேறவே ஆளுமை மாந்தர்கள்**
   **தெய்வீக நம்பகம்பட செயல்பட**
   **கூறவே பரதம் முன்னிலை பெறும்**
   **குவலயமே இந்தியாவை வணங்கும்**

5. **வணங்கவே மாநில உறவுகளை**
   **வளமுற வளர்ச்சிப் பணிகளுக்கு**
   **இணங்க நடத்த சமத்துவமும்**
   **எல்லா மாநிலங்களும் முன்னேறும்**

6. **ஏறவே தமிழக மக்களுக்கு**
   **இளைஞர்கள் படையென உருவாகி**
   **மாறவே இந்த தமிழகம் மலரவே**
   **மகா சேவையாக வளர நேரும்**

7. **நேருமைபட தன்னார்வ தொண்டுகள்**
   **நெஞ்சம் நெகிழ பெருக நேரும்**
   **வறுமை எனும் சூழல் மாறிட**
   **வளம் பெருக வடிவேலன் யான்**

8. **யானும் சூட்சும சக்தியாக அருளிட**
   **உயர்வான மழை வளம் நிலவளம்**
   **ஞானபலமும் கூட்டி மக்களை**
   **ஞானவழி காட்டி அருளுவேன்**

9. அருள்பட கழனி மக்களை காத்திட
அவசியம் கழனி பூமி காக்கப்பட
அருள் பூமியாக தமிழகம் மாறி
ஆளுமை சிறந்து மக்களுக்கு பாதுகாப்பு

10. காப்பான எல்லா வளர்ச்சிகளும்
கட்டாயம் என் அருளால் பெருகும்
ஒப்பு கொண்டு என் வழிபாடு பெருக்கும்
ஓங்கார ஆசான் அரங்கமகா ஞானி

11. ஞானியரின் ஞான வழிக்கு
ஞானிகள் பூசை நல் தருமநெறியை
இனிமைபட உலகோர் ஏற்றிட
எல்லா வளமும் பலமும் இந்தியா தமிழகம் அடையும் வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

### மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :

இந்தியா தமிழகம் தன்னில் விளம்பி வருடம் ஆவணி மாதம் 31ம் நாள் 16.09.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 7ம் நாள் 23.09.2018 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்

சத்திய பலமும், தரும பலமும் கொண்டதும் சமதர்மம் சமத்துவமும் நிறைந்த பாரத தேசமே சித்தர்கள் ஞானிகள் நிறைந்திட்டதும் சித்திகள் மிகுந்தும் உள்ள தமிழகமே இந்த தேசங்கள் தன்னில் இந்த வார நிகழ்வாக மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான் யானும் விளம்பி வருடம் ஆவணி மாதம் 31ம் நாள் 16.09.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 7ம் நாள் 23.09.2018, ஞாயிறு முடிய உள்ள நடக்க இருக்கும் நிகழ்வுகளை கூறுகிறேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இந்த வாரத்தினில் இந்திய தேசமெங்கும் வளர்ச்சி பணிகள் நடந்திடும். நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் தெய்வ நம்பிக்கையோடு தெய்வங்களை முன்னிறுத்தி நம்பிக்கையோடு செயல்பட பாரத தேசம் உலகினில் முன்னிலை பெறும். உலகமே இந்திய தேசத்தின் வளர்ச்சியினை கண்டு வணங்கும்படியான சூழ்நிலை உருவாகும்.

மத்திய அரசு மாநில அரசுகளுடன் உண்டான உறவுகளை வளமுடனும் நலமுடனும் பேணி பாதுகாத்து வளர்ச்சி பணிகளுக்கு உகந்தவாறு மாநில அரசுகளுக்கு உதவிகள் செய்து மாநில அரசுகளை சமத்துவத்தோடு சமமாய் பாவித்து நடந்திட எல்லா மாநிலங்களும் முன்னேற்றம் அடையும்.

தமிழகத்தினில் இளைஞர்கள் எல்லாம் ஓரணியில் திரண்டு தமிழகத்தின் முன்னேற்றத்திற்கும் மாற்றத்திற்கும் சேவை நோக்குடன் ஒன்றிணைந்து செயல்படும் சூழ்நிலை உருவாகும்.

இளைஞர்களின் தன்னார்வ தொண்டானது மக்கள் நெஞ்சம் நெகிழும்படியாக அமைந்து மக்கள் நெகிழும்படியான சூழல் தமிழகத்தினில் உருவாகும்.

நாட்டினில் உள்ள வறுமையான சூழல்கள் மாறி வளம் பெருகிட முருகப்பெருமான் யானும் சூட்சும சக்தி வடிவினில் அருள் செய்து தமிழகத்தை காக்கின்றேன்.

ஆதலினால் தமிழகத்தினில் உயர்வான மழை வளம் பெருகும். அதனால் தமிழகத்தின் நிலவளமும், நீர்வளமும் பெருகிடும், மக்களின் ஞானபலமும் பெருகிடும். மக்களிடையே ஞானபலம் கூட்டி ஞானவழி காட்டி நன்மைகளை முருகப்பெருமான் யானும் அருளி நிற்பேன்.

விவசாய பெருமக்களை காத்திட வேண்டுமாயின் விவசாயிகளுக்கும், விவசாயத்திற்கும் ஆதாரமான விவசாய நிலமும் விவசாயமும் காக்கப்பட வேண்டும். விவசாயிகளும் விவசாயமும், விவசாய நிலமும் பாதுகாக்கப்பட்டு அருள் பூமியாக முருகப்பெருமான் எமது அருளால் தமிழகம் மாற்றம் அடைந்து தமிழகத்தின் ஆட்சியும் சிறப்படைந்து தமிழக மக்களுக்கு அருள் பாதுகாப்பு பெருகி எல்லாவகையான வளர்ச்சி பணிகளும் பெருகி எமது அருளினால் அனைத்தும் சிறப்படையும்.

ஞானத்தலைவன் முருகப்பெருமானே கண்கண்ட தெய்வம் என ஒப்புக் கொண்டு முருகப்பெருமான் எமது வழிபாட்டினை பெருக்கி உலகை காக்கும் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியர் கூறும் ஜென்மத்தைக் கடைத்தேற்றி ஞானவாழ்வு தரவல்ல ஞானவழிக்கு உலகோர் வருகை தந்து ஞானிகள் திருவடி பற்றி ஞானபூஜைகளை செய்வதுடன் தருமநெறியை கடைப்பிடித்து தர்மங்களை தாராளமாய் செய்து இனிமையான வாழ்வினை உலகோர் வாழ்ந்திட நாடு எல்லா வளமும் நலமும் பெற்று சர்வபலம் அடைந்து இந்தியாவும் தமிழகமும் சிறப்பான நிலையை அடைந்திடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–